**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08022023-6733

Volume: 8

Issue: 2

Month: October

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 25.07.2023

Accepted: 03.09.2023

Published: 01.10.2023

Citation:
Mooventhan, PS. "In the Archaic Grammar Tradition and Variable Content in Muthal-Karu-Uri in Tholkappiya Aga Ilakkanam and Maran Agapporul." *Shanlax International Journal of Tamil Research*, vol. 8, no. 2, 2023, pp. 49–55.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i2.6733

*Corresponding Author:
psmnthn757@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# In the Archaic Grammar Tradition and Variable Content in Muthal-Karu-Uri in Tholkappiya Aga Ilakkanam and Maran Agapporul

**P.S. Mooventhan**
*Associate Professor, Department of Tamil*
*S.S. Government Arts College, Tiruttani, Tamil Nadu, India*
*http://orcid.org/0000-0003-1353-4821*

## Abstract

Porul Ilakkanam is a proof of the pride and uniqueness of Tamil language. It can be considered as the best of any language race in the world languages. The Porul Ilakkanam is the basis for the meaning and imagination of Sangam songs. Grammatical Grammar In Tamil tradition for thousands of years, there are many places where the narratives have preserved the character of the case. Tholkappiyam, which is considered to be the first complete grammar book of Tamil, was followed by various grammar books over time. They were adapted to the religious and social norms of the authors of those books and the customs of their time. Thus Maran Agapporul is unique in the later grammars of the sixteenth century. Developmental trends in subject grammar can be seen in the grammar description of this book. This article aims to show the origin and development of the ideas of this book in a comparative perspective, the skills contained in the archeology and the changes made by this book.

**Key Words***:* Semantics, Semantic Convention, Antecedent, Theme, Epithet.

## References

1. Arunachalam, M. (Ed.) Maran Agaporul, Gandhi Vidyalaya, Mayuram, 1975.
2. Arunachalam Pillai, M., (Ed.) Tolkāppiyam poruḷatikāram, akattiṇaiyiyal uraivaḷam, Madurai Kamarasar University, Madurai. 1975.
3. Ilangumaran, Ir., History of Grammar, Manivaskar Publishing House, Chennai, 1988.
4. Gopaliyar, T.V., (Ed.) Ilakkana vilakkam, Economics, Tanjore Saraswati Mahal Publication, Thanjavur. 1973.
5. Srinivasan, R., Tamil Grammatical Traditions, The Parker, Chennai, 2001.
6. Sundaramurthy, K., (Ed.) Tholkappiyam Economics, Annamalai University, 1986.
7. Subramanian, S.V., (Ed.) Tamil Grammar Texts, Meiyappan Publishing House, Chidambaram, 1990.
8. Palaniappan, V., Texts on Grammar, Annamalai University, Annamalai nagar, 1994.
9. Maruthanayagam, P., Sangam Poems, International Institute of Tamil Research, Chennai, 2000.

# தொல்காப்பிய அக இலக்கண மரபில் மாறன் அகப்பொருள் சுட்டும் முதல், கரு, உரி

***முனைவர் ப.சு. மூவேந்தன்***
இணைப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை
அ.சு.சு. அரசு கலைக்கல்லூரி, திருத்தணி

***ஆய்வுச் சுருக்கம்***
*தமிழ்மொழியின் பெருமைக்கும் தனித்திறனுக்கும் சான்றாகத் திகழ்வது பொருள் இலக்கணம் ஆகும். உலக மொழிகளில் எந்தவொரு மொழி இனத்திற்கும் இல்லாத சிறப்பாகவும் இதனைக் கருதலாம். சங்கப் பாடல்களின் பொருளமைதிக்கும், கற்பனைத் திறத்திற்கும் பொருள் இலக்கணமே அடிப்படையாக அமைந்திருக்கிறது. பொருள் இலக்கணம் தமிழர் மரபில் பல்லாயிரம் ஆண்டுகளாக வழக்கிலிருந்து வந்துள்ள தன்மையினைத் தொல்காப்பிய நூற்பாக்கள் பல இடங்களில் சுட்டுகின்றன. தமிழின் முற்றுமுழுதான முதல் இலக்கண நூலாகத் திகழும் தொல்காப்பியத்தை அடியொற்றி காலப்போக்கில் பல்வேறு இலக்கண நூல்கள் தோற்றம் பெற்றன. அவை அந்நூல்களின் நூலாசிரியர் சமயநெறிக்கும், சமூக நெறிக்கும் அவர்தம் கால வளமைக்கும் ஏற்றவாறு அமைந்தன. அவ்வகையில் பிற்காலத்தில் பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கண நூல்களில் மாறன் அகப்பொருள் தனிச்சிறப்புடையதாகத் திகழ்கிறது. பொருள் இலக்கணத்தில் ஏற்பட்ட வளர்ச்சிப் போக்குகளை இந்நூலின் இலக்கண விளக்கத்தில் இனம் காணமுடிகிறது. இந்நூல் கருத்துக்களின் தோற்றம், வளர்நிலை ஆகியன தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள திறத்தினையும், இந்நூல் செய்துள்ள மாற்ற நிலையினையும் ஒப்பியல் நோக்கில் காட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது.*
***திறவுச் சொற்கள்:*** *பொருளிலக்கணம், அகப்பொருள் மரபு, முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள், தொல்காப்பியம், பொருளதிகாரம்.*

## முன்னுரை

தமிழின் இலக்கண மரபு ஐந்திலக்கணப் பாகுபாட்டினைக் கொண்டமைந்தது. இதனை அடியொற்றியே காலப்போக்கில் பொருள் இலக்கணம் உணர்த்தும் நூல்கள்; தோன்றின. தொல்காப்பியப் புறத்திணையியலுக்குப் பின்னர்புறப்பொருள்பற்றியதனி இலக்கண நூலாகப் பன்னிருபடலம் தோன்றியது. அதன்வழி நூலாகப் பிற்காலத்தில் புறப் பொருள் வெண்பாமாலை தோற்றம் பெற்றது. இதேபோன்று அகப்பொருள் இலக்கணம் உணர்த்தும் நூல்களில் இறையனார் அகப்பொருள், அகப்பொருள் விளக்கம், களவியற்காரிகை, மாறனகப்பொருள் என அகப்பொருள் இலக்கணம் குறித்த நூல்கள் எழுந்தன. இந்நூல்கள் ஒவ்வொன்றிலும் தொல்காப்பிய மூல மரபினையும், இலக்கியப் போக்கில் காலவளர்ச்சியில் ஏற்பட்ட வளர்நிலை மாற்றத்தையும் இனம் காணலாம். அவ்வகையில் தொல்காப்பியப் பொருளதிகாரமும் மாறனகப்பொருளும் எடுத்துரைக்கும் அகப்பொருள் இலக்கண நிலைகளில் முதல் - கருவிளக்க நிலைகள் குறித்து இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்படுகிறது.

## சங்கக் கவிதையும் இலக்கண மரபும்

தொல்காப்பியப் பொருளதிகாரம் முதன் முதலாகத் தமிழ் இலக்கண மரபில் அக இலக்கணம் குறித்துக் கூறுகின்றது. இந்நூல் எழுதப்படுவதற்கு முன்னர் பிற இந்திய மொழிகள் எவற்றிலும் அகமரபுக்கொள்கை இடம்பெறவில்லை. (ப. மருதநாயகம்) உலகியல் வாழ்க்கையில், நடப்பியல் நெறியில்

ஆணும் பெண்ணும் ஒத்த அளவில் அன்பு கலந்து வாழும் காதல் வாழ்வைக் களவு-கற்பு என்ற நிலைப்பாடுகளில் தொல்காப்பியம் இலக்கியக் கொள்கையாக வகுத்துரைத்தது. புற உலக மானுடக் காதலையே தொல்காப்பியம் அன்பின் ஐந்திணை என்றுரைத்தது. இதன் அடிப்படையிலேயே தொல்காப்பியர் அக இலக்கணத்தை நாடகவழக்கு-உலகியல் வழக்கு எனத் தெளிவுபடுத்தினார். எனவே சங்கக் கவிதை மரபு அக்காலச் சமூக வழக்காறுகளுக்கு முதன்மை கொடுத்தே இலக்கணீயமாக மலர்ந்தது. இத்தகு இலக்கியத்திற்கே தொல்காப்பியர் இலக்கணம் வகுத்தார்.

தொல்காப்பியர் தாம் வாழ்ந்த காலத்திலும் தமக்கு முன்னும் இருந்த கவிதைகளிலிருந்தே இலக்கணம் வகுத்தார். இவை இனக்குழு மக்களின் சமூக மரபில் காணப்பட்ட காதல் வாழ்க்கையையும், நிலவுடைமையால் ஏற்பட்ட சமூக வாழ்க்கையையும் பிரதிபலிப்பனவாக அமைந்தன. இத்தகு இலக்கியக் கொள்கையையே அகமரபாக்கிப் பிற்கால இலக்கண நூலோர் இலக்கணமாக்கினர். சங்க இலக்கியம் உரைத்த மானிடக் காதல், காதல் குறித்த இலக்கிய மரபுகள் பிற்காலத்தில் மனிதன் - கடவுளர் இடையிலானபக்தியின் ஆழத்தை வெளிப்படுத்த உதவும் உத்திகளாக அமைந்தன. சங்கத் தமிழ்க்கவிதை மரபு, காதல் என்பது ஒரே தளத்தில் பொருள்தரும் கவிதைகளாக விளங்கிட, பக்தி இயக்கக் கவிஞர்கள் முதன்முதலாகப் பல்வேறு பொருள்தரும் அர்த்தத் தளங்களை உடைய குறியீட்டுக் கவிதைகளாக இவற்றை உருமாற்றினர். இதனை அக இலக்கிய, இலக்கண மரபின் அடுத்த வளர்ச்சியாகக் கருதலாம்.

### பொருளதிகாரச் சிறப்பு

தொல்காப்பியப் பொருளதிகாரம் அகம், புறம் என்ற பகுப்புக்களைக் கொண்டது. இதன் வளர்நிலையை எடுத்துரைப்பனவாகப் பிற்கால இலக்கண நூல்கள் அமைந்தன. காலமாற்றம் மற்றும் சமூக மாற்றங்களுக்கு ஏற்ப இலக்கண, இலக்கியப் போக்குகளிலும் மாற்றம் ஏற்படுவது இயல்பான ஒன்றே. அத்தகு மாற்றவிளைவுகளின் தாக்கம்; பிற்காலத்தில் தோன்றிய இலக்கண நூல்களின் போக்குகளிலும் அமைப்பு முறைகளிலும், பாடு பொருட் கூறுகளிலும் நிகழ்ந்தன. இலக்கியத்தின் போக்குகள் பல்வேறு நிலைகளிலும் மாற்றம் பெறுவதனைப் போன்று இலக்கியத்திற்கு அரணாக அமையும் இலக்கணங்களிலும் மாற்றங்கள் நிகழ்வது இயல்பான நிகழ்வுகளில் ஒன்றாக அமைந்துள்ளது. இத்தகு சூழலே பல்வேறு இலக்கண நூல்கள் உருவாவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தின.

### மாறனகப்பொருள்

பதினாறாம் நூற்றாண்டில் வெளிவந்த மாறனகப்பொருள் நூலினை இயற்றியவர்; திருக்குருகைப்பெருமாள் கவிராயர் ஆவார். இவரது இயற்பெயர் சடையன் என்பதாகும். இந்நூலாசிரியர் வைணவ சமயத்தில் மிகுந்த பற்று மிக்கவராகவும் விளங்கியுள்ளார். இந்நூல் கி.பி. 1552இல் அரங்கேற்றம் செய்யப் பெற்றுள்ளது. இந்நூலாசிரியர் மாறனகப்பொருளுடன் மாறனலங்காரம், திருப்பதிக்கோவை, திருக்குருகரமான்மியம், நம்பெருமான் மும்மணிக்கோவை, மாறன்பாப்பாவினம், மாறன்கிளவி மணிமாலை என்ற நூல்களையும் இயற்றியுள்ளார். இதனுள் திருப்பதிக்கோவை என்னும் நூல் மாறன் அகப்பொருள் நூலுக்கு மேற்கோள் விளக்கப் பாடலாய் அமைந்த கோவை இலக்கிய நூலாகும்.

இந்நூலின் பொருட்சிறப்பினைக் குறித்துத் தி.வே.கோபாலையர், நம்பியகப் பொருளில் குறிப்பிடப்படாது தொல்காப்பியத்தில் பெரும்பாலும் பொருளியலில் காணப்படும் வழுவமைதிகளும், தொல்காப்பிய மெய்ப் பாட்டியலில் கூறப்படும் எல்லா மெய்ப்பாடுகளும், இலக்கியம் கண்டு இயம்பப்பட்ட சில செய்திகளும் மாறனகப்பொருளின் ஒழிபியலில் காணப்படுகின்றன. பிறருடைய நூற்பாக்களின்

செய்திகளை எடுத்துக்கூறுமிடத்தும், அவற்றை அவர்கள் சொற்களால் குறிப்பிடாது தம் சொற்களால் எடுத்துரைப்பது இவருடைய வழக்கம். நம்பி அகப்பொருளின் அகத்திணையியலில் காணப்பெறாத சில செய்திகள் மாறனகப் பொருளில் தொல்காப்பியத்தை ஒட்டியும், பழைய இலக்கியங்களையும் மரபுகளையும் நோக்கியும் அமைக்கப்பட்டுள்ளன (ப. 27) என்று குறிப்பிடுகிறார். இதனால், மாறனகப்பொருள் அக இலக்கண நூல்களில் அறியத்தக்க நூலாகத் திகழ்வது தெளிவாகிறது.

### மாறனகப்பொருள் நூல் அமைப்பு

அகப்பொருள் இலக்கணத்தை விரித்துக் கூறுகின்ற இந்நூல்; அகத்திணையியலில் 128 நூற்பாக்களும், களவியலில் 62 நூற்பாக்களும், வரைவியலில் 34 நூற்பாக்களும், கற்பியலில் 10 நூற்பாக்களும், ஒழிபியலில் 126 நூற்பாக்களும் என மொத்தம் 360 நூற்பாக்கள் இடம் பெற்றுள்ளன.

### இலக்கண இயல் பகுப்பு

தொல்காப்பியப் பொருளதிகாரம் அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என்ற நான்கு இயல்களில் அகப்பொருள் இலக்கணத்தை உணர்த்துகின்றது. பிற்கால அகப்பொருள் இலக்கணநூல்கள் அகப்பொருள் இலக்கணத்தை நாடகப் பொருளாக்கி, நாடகமாந்தர்களை உருவாக்கி ஒன்றன்பின் ஒன்றாகப் பல நிகழ்ச்சிகளைக் கதைப்போக்கில் அமைத்தன. இவ்வாறான அகப்பொருள் அமைப்பே பிற்காலச் சிற்றிலக்கிய நூல்கள், குறிப்பாகக் கோவை நூல்கள் தோன்றக் காரணமாக அமைந்தன. அகப்பொருள் இலக்கணம் உரைக்கும் நூல்களில் அகத்திணையியல், களவியல், கற்பியல் ஆகியன பொதுக் கூறுகளாக அமைந்தன. காலமாற்றத்தால் ஏற்பட்ட சிந்தனையின் விளைவாக இயல் பகுப்பிலும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

### தொல்காப்பியம் - மாறனகப்பொருள் இயல் பகுப்பு

| இயல் | தொல்காப்பியம் - அகப்பொருள் - 4 இயல்கள் | மாறனகப்பொருள் - 5 இயல்கள் |
|---|---|---|
| 1. | அகத்திணையியல் | அகத்திணையியல் |
| 2. | களவியல் | களவியல் |
| 3. | கற்பியல் | வரைவியல் |
| 4. | பொருளியல் | கற்பியல் |
| 5. | - | ஒழிபியல் |

### நம்பியகப்பொருள்-மாறனகப்பொருள்

நம்பியகப்பொருள் வெளிவந்து ஏறத்தாழ நான்கு நூற்றாண்டுகள் கடந்து எழுதப்பட்ட நூல் மாறனகப்பொருள் ஆகும். இந்நூல் நூற்பெயரின் தலைப்பிலும், கருத்திலும், இலக்கணம் உணர்த்தும் முறையிலும் பெரிதும் நம்பியகப் பொருளையே தழுவிநிற்கின்றது. இதனை, தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்களில் உணர்த்தப்பெற்ற அகப்பொருள் இலக்கணங்களை முறைப்படுத்தித் தொகுத்தும், வகுத்தும், விரித்தும் உரைக்கும் நூலாகத் திகழ்கிறது. கருத்துத் தழுவல் என்ற நிலையில் பெரும்பான்மையும் நம்பியகப்பொருளையே பெரிதும் தழுவியுள்ளது. சமணர் இயற்றிய நம்பியகப்பொருளைக் கண்டு இலக்கியம் ஆராயக்கூடாது என எண்ணிய இவர் நூல் செய்யும் போது நம்பியகப் பொருளினின்றும் மீள இயலவில்லை என்கிறார் வெ. பழநியப்பன்; (ப. 167) இதனால், அகஇலக்கணம் உரைத்தலில் சமயநெறி ஓங்கி நிற்பது தெளிவாகிறது.

| இயல் | நம்பியகப்பொருள் நூற்பாக்கள் - 253 | மாறனகப்பொருள் நூற்பாக்கள் -360 |
|---|---|---|
| 1. | அகத்திணையியல் - 116 | அகத்திணையியல் - 128 |
| 2. | களவியல் - 54 | களவியல் - 62 |
| 3. | வரைவியல் - 29 | வரைவியல் - 34 |
| 4. | கற்பியல் - 10 | கற்பியல் - 10 |
| 5. | ஒழிபியல் - 43 | ஒழிபியல் - 125 |

### மாறனகப்பொருளில் தொல்காப்பியக் கூறுகள்

பொருளிலக்கண நூல்கள் அகத்திணைகளைச் சுட்டுவதிலும், வரையறுத்துக் கூறுவதிலும் பலநிலைகளிலும் வேறுபட்டு நிற்கின்றன. தொல்காப்பியர் கருத்தின்படி அகத்திணைகள் ஏழு. இவற்றில் ஐந்துதிணைகள் நிலம் பெற்று வருவனவாகும். கைக்கிளை, பெருந்திணைகளுக்கு நிலம் வகுக்கப்படவில்லை. பிற்காலத்து எழுந்த இலக்கண நூல்களில் மாறனகப்பொருள் ஐந்திணைகளை முற்றாக ஏற்கிறது.

### அகத்திணையியல்

மாறனகப்பொருள் அகத்திணையியலில் அகப்பொருள் பற்றிய இலக்கணம் கடவுள் வாழ்த்தொடு தொடங்குகின்றது. இவ்வியலில் அகப்பொருள், அகப்பொருளின் வகை, அகப்பொருள் சொல்லும் முறைமை, கைக்கிளை, பெருந்திணை, அன்பின் ஐந்திணை இன்னது என்பது, ஐந்திணைக்குரிய பெயர்கள், முதற் பொருள், நிலம்-பொழுது, ஐந்திணைக்குமுரிய முதற்பொருள் பகுப்பு, கருப்பொருள், கருப் பொருளின் வகை, உரிப்பொருள், கைகோள், கைக்கிளை நிகழும் காலம், கைக்கிளைக்குரிய தலைமக்கள், இயற்கைப் புணர்ச்சியின் இலக்கணம், உள்ளப்புணர்ச்சி, மெய்யுறு புணர்ச்சி, குறியிடம், களவில் நிகழும் பிரிவு, வரைவு, உடன்போக்கு, அறத்தொடு நிற்றல், கற்பின் வகை, கற்பில் பிரிவு, ஊடல், உள்ளுறை, உவமம், வாயில்கள் முதலான செய்திகள் இடம்பெற்றுள்ளன.

தொல்காப்பியர் குறிப்பிடும் அகப்பொருள் செய்திகளை வகுத்தும், தொகுத்தும், விரித்தும் கூறும்பகுதியாக இவ்வியல் அமைந்துள்ளது. சான்றாகச் சில பகுதிகள் இங்குச் சுட்டப் படுகின்றன.

***அகப்பொருளுக்குரிய திணைகள் குறித்துத் தொல்காப்பியர்,***

***“கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்***
***முற்படக் கிளந்த எழுதிணை என்ப”***
***(தொல். நூ. 947)***

***என்று கூறுவதை மாறனகப்பொருள் நூலாசிரியர்,***

***“கண்ணகன் ஞாலம் நுண்ணிதி னுணர்த்தமிழ்க்***
***கடலகத் தகப்பொருள் கைக்கிளை முதலா***
***விடமிகு பெருந்திணை யிறுவாய் இடைப்படு***
***திடனுறு மைந்திணை யெனயெழு வகைத்தே”***
***(நூ. 1)***

என்று விளக்கம் தந்து உரைக்கின்றார்.

### முதல், கரு, உரிப்பொருட் பாகுபாடுகள்

பொருளிலக்கணம் உணர்த்தலில்; உரையாசிரியர்களின் பங்களிப்பு மிகுதி. மூலநூலாசிரியர் கூறாது விடுத்த பல செய்திகளுக்கு உரையாசிரியர்கள் விளக்கம் தந்து அவற்றை நிறைவு செய்துள்ளனர். அவ்வகையில் பொருளிலக்கண முப்பொருள் விளக்கத்தில் இலக்கண ஆசிரியர்கள் விடுத்தவற்றிற்கு உரையாசிரியர்கள் விளக்கம் தந்துள்ளதனைக் காணலாம். பொருள் இலக்கண நூல்கள் நிலம் பற்றிய பாகுபாட்டில் மாறுபாடு கொள்ளவில்லை. ஆயின் முப்பொருள் வரையறுப்பதில் சிறுசிறு மாறுபாடுகள் பெற்று விளங்குவதனைக் காண முடிகின்றது. தொல்காப்பியத்திற்கு உரைவகுத்த இளம்பூரணர் முதலான உரையாசிரியர்கள் இவற்றின் பொருத்தப்பாட்டினை விளக்கி உரைத்துள்ளனர். கருப்பொருளின் வகையை மட்டும் தொல்காப்பியர் சுட்டிச்சென்றுள்ளதால் உரையாசிரியர்கள் அவ்வத்திணைக்குரிய கருப் பொருள்களைப் பொருத்தமுற விளக்குவதனைக் காணலாம்.

| முதற்பொருள் | | | கருப்பொருள் | உரிப்பொருள் |
|---|---|---|---|---|
| நிலம் | பொழுது | | | |
| | பெரும்பொழுது | சிறுபொழுது | | |
| முல்லை | கார் | மாலை | தெய்வம், உணா, மா, மரம், புள், பறை, செய்தி, யாழ், பூ, நீர் | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| குறிஞ்சி | கூதிர், முன்பனி | யாமம் | ,, | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| மருதம் | அறுவகைப் பொழுதும் (உரையாசிரியர்கள் கருத்தின்படி) | வைகறை, விடியல் | ,, | ஊடலும் ஊடல் நிமித்தமும் |
| நெய்தல் | அறுவகைப் பொழுதும் (உரையாசிரியர்கள் கருத்தின்படி) | எற்பாடு | ,, | இரங்கலும் இரங்கல் நிமித்தமும் |
| பாலை (நிலம் சுட்டப் பெறவில்லை) | பின்பனி | நண்பகல் | ,, | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |

**மாறனகப்பொருள்**

| முதற்பொருள் | | | கருப்பொருள் | உரிப்பொருள் |
|---|---|---|---|---|
| நிலம் | பொழுது | | | |
| | பெரும்பொழுது | சிறுபொழுது | | |
| குறிஞ்சி (மலை) | கூதிர், முன்பனி | யாமம் | 14 | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| பாலை (சுரம்) | இளவேனில், முதுவேனில், பின்பனி | நண்பகல் | 14 | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |
| முல்லை (புறவம்) | கார் | மாலை | 14 | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| மருதம் (பழனம்) | ஆறு பெரும் பொழுதுகளும் | வைகுறுபொழுது விடியல் | 14 | ஊடலும் ஊடல் நிமித்தமும் |
| நெய்தல் (கடல்) | ஆறு பெரும் பொழுதுகளும் | எற்பாடு | 14 | இரங்கலும் இரங்கல் நிமித்தமும் |

## தொல்காப்பிய வழி மாறனகப் பொருளில் கருப்பொருள்

அணங்கு, உயர்ந்தவர், இழிந்தவர், புள், விலங்கு, ஊர், பூ, மரம், நீர், துப்பு (உணவு), யாழ், பண், பறை, செய்தி (தொழில்) எனப் பதினான்கு உறுப்புக்கள் கருப்பொருளாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. கருப்பொருள் வகைகளும் உடன்சேர்த்து எடுத்துரைக்கப் பட்டுள்ளன. தொல்காப்பியர் ஒவ்வொரு திணைக்குமான கருப்பொருள்களைக் குறிப்பால் சுட்டிச்செல்ல, பிற்கால இலக்கண நூல்கள் அவற்றை வகைதொகை செய்து விளக்குகின்றன. இவை இலக்கண மரபு வளர்ச்சியில் எழுந்த மாற்றங்களாகும். மாறனகப்பொருளின்கருப்பொருள்பகுப்பு இலக்கணம் எழுந்த காலப் பின்னணியை வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது.

## முடிவுகள்

தொல்காப்பியரின் அக இலக்கியக் கொள்கையை உள்வாங்கிக் கொண்டு இறையனார் களவியல், நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், அறுவகை இலக்கணம் முதலான பல நூல்கள் தோன்றின. இவை தவிரப் பாட்டியல் நூல்களும் அகமரபினை வளர்த்தெடுத்தன. இறையனார் களவியல் பாண்டிக்கோவையை மையப்படுத்தி விளங்கியது. நம்பியகப்பொருள், தஞ்சைவாணன் கோவையை மையமிட்டு அகமரபினை விளக்கியது. இதேபோல் மாறனகப் பொருள் திருப்பதிக் கோவையை மையமிட்டு எழுந்தது. இதனால் பிற்கால இலக்கணநூல்கள் அரசவை அக இலக்கியங்கள் ஆயின என்று தெளிவாகின்றது.

பிறருடைய நூற்பாக்களில் இடம் பெறும் செய்திகளை எடுத்துக் கூறுமிடத்தும், அவற்றை அவர்கள் சொற்களால் குறிப்பிடாது தம் சொற்களால் எடுத்துரைப்பது மாறனகப் பொருள் நூலாசிரியரின் இலக்கணக் கொள்கையாக விளங்குகிறது.

நம்பியகப்பொருளின் அகத்திணையியலில் காணப்பெறாத சில செய்திகள் மாறனகப் பொருளில் தொல்காப்பியத்தை ஒட்டியும், பழைய இலக்கியங்களையும் மரபுகளையும் நோக்கியும் இடம்பெற்றுள்ளன. இந்நூல் நம்பியப்பொருளைப் பெரிதும் பின்பற்றி நடந்தாலும் நம்பியகப்பொருளில் இடம் பெறாத சில செய்திகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இப்பகுதிகள் நூலாசிரியரின் புலமை வெளிப்பாடாக அமைந்துள்ளன.

மாறனகப்பொருள் இலக்கணம் அக்காலச் சமூகமரபினையும், சமூகநிலைப்பாட்டினையும் எடுத்துரைப்பதாய் அமைந்துள்ளது. இதன் வழியாக இலக்கணம் உரைத்தலில் சமயங்கள் செல்வாக்குப் பெற்றமையினையும் அறிய முடிகிறது. தொல்காப்பிய அகப்பொருள் இலக்கண வளர்ச்சியின் ஒரு கூறாக மாறனகப் பொருள் விளங்குவதனை இதன் வழி உணரமுடிகின்றது.

## துணைநூல்கள்

1. அருணாசலம், மு. மாறன்அகப்பொருள், காந்தி வித்தியாலயம், மாயூரம், 1975.
2. அருணாசலம் பிள்ளை, மு., (ப.ஆ.) தொல்காப்பியம் பொருளதிகாரம், அகத்திணையியல் உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை. 1975.
3. இளங்குமரன், இரா., இலக்கண வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1988.
4. கோபாலய்யர், தி.வே., (ப.ஆ.) இலக்கண விளக்கம், பொருளதிகாரம், தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு, தஞ்சாவூர். 1973
5. சீனிவாசன், இரா., தமிழ் இலக்கண மரபுகள், தி பார்க்கர், சென்னை, 2001
6. சுந்தரமூர்த்தி, கு., (ப.ஆ.), தொல்காப்பியம் பொருளதிகாரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1986.
7. சுப்பிரமணியன், ச.வே., (ப.ஆ.), தமிழ் இலக்கண நூல்கள், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 1990.
8. பழனியப்பன், வே., பொருளிலக்கண உரைகள், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர், 1994.
9. மருதநாயகம், ப., சங்கக் கவிதையாக்கம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2000.